காஞ்சிபுரம் மாவட்டம் -

# வளர்ச்சிப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை!

காஞ்சிபுரம், ஜூலை 20-

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் நகராட்சி அலுவலகத்தில் வளர்ச்சி பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது.

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் நகராட்சி அலுவலகத்தில் நேற்று (19.07.2024) வளர்ச்சி பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் குன்றத்தூர் மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் ஏற்பட்டு வரும் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் சாலை ஆக்கிரமிப்பு அகற்றுவது தொடர்பான பணிகள், நகராட்சிக்குட்பட்ட கால்வாயினை தூர்வாருதல், பல்லாவரம் மற்றும் குன்றத்தூர் விரிவாக்கம் பணிகள் குறித்தும், அடையாறு ஆறு மற்றும் செம்பரம்பாக்கம் ஏரியின் உபரி நீர் வெளியேறும் பாதையை தூர்வாருமாறும் அறிவுறுத்தினார்.

மேலும் வருவாய் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, காவல் துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மின்சாரத் துறை உள்ளிட்ட கலந்து கொண்ட அனைத்து துறை அரசு அலுவலர்களுக்கும் பணியினை விரைவுபடுத்த குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

இவ்ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், தாம்பரம் காவல் கூடுதல் ஆணையர் திருமதி.மகேஸ்வரி, தாம்பரம் துணை ஆணையர் திரு.பவன் குமார், மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் வை.ஜெயக்குமார், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.



நேற்று (19.07.2024) காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் நகராட்சி அலுவலகத்தில் வளர்ச்சி பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், தாம்பரம் காவல் கூடுதல் ஆணையர் திருமதி.மகேஸ்வரி, தாம்பரம் துணை ஆணையர் பவன் குமார், மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் வை.ஜெயக்குமார் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

மதநல்லிணக்கத்துக்கு கேடு விளைவிக்கும் உத்தரவை

# உத்தரப்பிரதேச பா.ஜ.க. அரசு உடனே திரும்பப் பெற்றிடுக!

## காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஜூலை.20-

மத நல்லிணக்கத்துக்கு கேடு விளைவுக்கும் கன்வார் யாத்திரை வழித்தட உணவகங்களில் உரிமையாளர்களின் பெயர் பலகை வைக்கப்பட வேண்டும் என்ற உத்தரவை உத்தரப் பிரதேச அரசு திரும்பப் பெற வேண்டும் என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டிருக்கும் எக்ஸ் பதிவில், “ஒவ்வொரு குடிமகனுக்கும் சாதி, மதம், மொழி அல்லது வேறு எந்த அடிப்படையிலும் பாகுபாடு காட்டப்பட மாட்டாது என்று நமது அரசியலமைப்புச் சட்டம் உறுதியளிக்கிறது. உத்தரப் பிரதேசத்தில் வண்டிகள், கடைகளில் அவற்றின் உரிமையாளர்களின் பெயர்கள் அடங்கிய பலகைகளை வைக்க வேண்டும் என்ற பிரித்தாளும் உத்தரவு நமது அரசியலமைப்பு, நமது ஜனநாயகம் மற்றும் நமது பொதுவான பாரம்பரியத்தின் மீதான தாக்குதலாகும். சாதி, மத அடிப்படையில் சமூகத்தில் பிளவை ஏற்படுத்துவது அரசியல் சாசனத்துக்கு எதிரான குற்றமாகும். இந்த உத்தரவை உடனடியாக திரும்பப் பெற்று, உத்தரவு பிறப்பித்த அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

உத்தராகண்ட், உத்தரப் பிரதேசம் போன்ற வட மாநிலங்களில் ஒவ்வோர் ஆண்டும் இந்துக்களின் ஷ்ரவண மாதத்தில் (ஜூலை - ஆகஸ்ட்) கன்வார் யாத்திரை மேற்கொள்ளப்படுகிறது. இந்த யாத்திரை மேற்கொள்ளும் சிவ பக்தர்கள் கன்வாரியாக்கள் என அழைக்கப்படுகின்றனர். வட மாநிலங்களைச் சேர்ந்த பக்தர்கள் உத்தராகண்ட் மாநிலத்தின் ஹரித்வார் உள்ளிட்ட புனித தலங்களுக்குச் சென்று கங்கை நீரை எடுத்து வருவார்கள். பிறகு அந்த கங்கை நீரைக் கொண்டு தங்கள் ஊர்களில் உள்ள சிவன் ஆலயங்களில் உள்ள சிவனுக்கு அபிஷேகம் நடத்துவார்கள்.

இதற்கிடையே, உத்தரப் பிரதேசத்தில், கன்வார் யாத்திரை செல்லும் வழித்தடத்தில் உள்ள அனைத்து உணவகங்களுக்கும் அவற்றின் உரிமையாளர்களின் பெயர்களை காண்பிக்கும் பெயர்ப் பலகைகளை வைக்க வேண்டும் என அம்மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் வெள்ளிக்கிழமை (ஜூலை 19) உத்தரவிட்டுள்ளார். அதன்படி, ஒவ்வொரு உணவகங்களும் அல்லது தள்ளுவண்டி உணவுக்கடைகள் உட்பட தங்கள் உரிமையாளரின் பெயரை உணவகத்தின் பெயர்ப் பலகையில் வைத்திருக்க வேண்டும்.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி ஒன்றியத்தில்

# 530 பயனாளிகளுக்கு ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டத்தில் வீடு கட்டுவதற்கான ஆணை!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்! நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. - எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., பங்கேற்பு!

மயிலாடுதுறை, ஜூலை 20 -

மயிலாடுதுறை மாவட்டம்,சீர்காழியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் சீர்காழி ஒன்றியத்தில் 530 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகட்டுவதற்கான ஆணைகளையும்,மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள 10 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத்தேர்வு வினா,விடை கையேடுகளையும், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் வழங்கினார்.

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் 530 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகட்டுவதற்கான ஆணைகளையும், 10 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத்தேர்வு வினா,விடை கையேடு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி தலைமை தாங்கினார். மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சீர்காழி ஒன்றிய குழு தலைவர் கமல ஜோதிதேவேந்திரன் வரவேற்றார். நிகழ்ச்சி யில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு சீர்காழி ஒன்றியத்தில் உள்ள 530 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகட்டுவதற்கான ஆணைகளையும், மயிலாடுதுறை மாவட்டத்தில் 10 மற்றும் 12ம் வகுப்பு படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு பொதுத் தேர்வுக்கான வினா, விடை கையேடு வழங்கி பேசுகையில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குடிசை இல்லா மாநிலமாக தமிழ்நாடு மாற்ற வேண்டும் என்ற நோக்கோடு குடிசை வீடுகளை மாற்றி காங்கிரட் வீடுகளாக மாற்றி தர வேண்டும் என்ற உயர்ரிய நோக்கோடு செயல்படுத்திடும் விதமாக வீட்டுக்கு ரூ.3.50,000 என்று இந்த ஆண்டு ஒரு லட்சம் வீடு கட்ட ரூ 3,500 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திட்டங்களில் கலைஞரின் கனவு இல்லம் என்பது தமிழக மக்களால் மிகப்பெரிய வரவேற்பை பெற்றிருக்கின்றது. தமிழ்நாட்டை பொறுத்தவரைக்கும் 38 மாவட்டங்கள் உள்ளன. அதில் நமது மயிலாடுதுறை மாவட்டத்திற்கு மட்டும் கிட்டத்தட்ட 3000 வீடுகளுக்கு ரூ.105 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். அதில் இங்கு இருக்கின்ற சீர்காழி ஒன்றியத்தில் 530 வீடுகளுக்கு ரூ.18 கோடி மதிப்பிலான பணி ஆணைகளை வழங்க உள்ளோம். ஒவ்வொருவருக்கும் சொந்த வீடு என்பது மிக முக்கியமானது. .இரண்டு ஆண்டுகளுக்கு முன் மயிலாடுதுறை மாவட்டத்தில் சீர்காழி, செம்பனார் கோயில், கொள்ளிடம் ஒன் றிய பகுதிகளில் இரண்டு நாளில் 50 சென்டிமீட்டர் மழை பெய்து மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. இது போன்ற பாதிப்புகள் இருக்கக் கூடாது என்பதற்காக தான் குடிசை வீடுகளாக உள்ளதை காங்கிரீட் வீடுகளாக மாற்றும் திட்டத்தை கலைஞர் அவர்கள் கொண்டு வந்தார்கள். குறிப்பாக முதலமைச்சர் கிராம சாலை திட்டத்திற்கு 2022 - 2023ஆம் ஆண்டில் ரூ.62 கோடியில் சாலை பணிகள் மேற்கொள்ளப் பட்டுபணிகள் நடைபெற்று வருகிறது. 2024-2025 ஆண்டிற்கு ரூ 66 கோடியில் சாலை பணிகள் தொடங்கப்பட்டு முதற்கட்டமாக ரூபாய் 20 கோடியில் மேற்கொள்ளப் பட்டு உள்ளது அடுத்த கட்டமாக ரூ. 46 கோடியில் பணிகள் மேற்கொள்ளப் பட உள்ளது. சீர்காழி அரசு மருத்துவமனைக்கு ரூபாய் 23 கோடியில் கட்டிடங்கள், முதலைமேடு பகுதியில் புயல் பாதுகாப்பு மையம் என பல்வேறு திட்டங்களை நம்முடைய முதல்வர் அவர்கள் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு செயல்படுத்தி வருகிறார். அடித்தட்டு மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் மக்களுடன் முதல்வர் என்ற மகத்தான திட்டத்தை முதலில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சியில் செயல்படுத்தி னார்கள் 30 நாளில் நீங்கள் கொடுக்கும் மனைவிக்கு தீர்வு காணும் வேண்டுமென்ற அந்த அந்த திட்டத்தை செயல்படுத்தியுள்ளார்.. இப்போது மற்றொ ருவன் முதல்வர் திட்டம் ஊராட்சிபகுதிகளும் விரிவு படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுடைய முதலமைச்சர் தமிழ்நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்காகவும்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலமைச்சர் ஆய்வு மேற்கொண்டு வருகிறார் கடந்தாண்டு நாகப்பட்டினத்தில் ஆய்வு மேற்கண்ட போதுஅப்போது மயிலாடுதுறை மாவட்டத்தில் கல்வி வளர்ச்சி பின் தங்கியுள்ளது என்பதை அறிந்து கல்வி வளர்ச்சியை உயர்த்திட வேண்டும் என்ற நடவடிக்கை மேற்கொண்டு என்று முதலமைச்சர் வைத்த கருத்தின் அடிப்படையில்மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள், ,நாடாளுமன்ற உறுப்பினர், கல்வித் துறை அதிகாரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து கல்விற்கான வளர்ச்சி பணிகளை மேற்கொண்டு எடுத்த நடவடிக்கையால் 37ம் இடத்தில் இருந்து 2 tம் இடத்திற்கு 10 இடங்கள் முன்னோக்கு சென்றுள்ளது.

சீர்காழி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 530 பயனாளிகளுக்கு தலா ரூ.3 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் புதிய வீடுகட்டு வதற்கான ஆணைகளையும், மயிலாடுதுறை மாவட்டத்தில் கொடையாளர்கள் பங்களிப்புடன் 10ம் வகுப்பு மாணவர்களுக்கு 38,500; கற்றல் கையேடுகளையும், 12ம் வகுப்பு மாணவர்களுக்கு 38,831 கற்றல் கையேடுகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கே.ஜி. சீனிவாசன், உமா மகேஸ்வரி சங்கர், செல்லசேதுரவிகுமார், மங்கை எம். சங்கர், ஏ.ஜி ஜெ. பிரபாகர், பஞ்சு குமார், ப.முருகமணி, ஏ.ஆர். ராஜா, கு.வைத்தியநாதன், ம.சுப்பராயன், குண்டாமணி எ) செல்வராஜ், மற்றும் முத்து தேவேந்திரன், வி.எஸ்.என். செந்தில், ஜெயபிரகாஷ், உஷாநந்தினி பிரபாகரன், எஸ். ஆனந்தன், தியாகவிஜேஸ்வரன், மு.ஷபீர், மு.மணிமேகலை, உ.அர்ச்சனா, சங்கர், ரமேஷ்பாபு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



நேற்று (19.07.2024) பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, அமெரிக்க துணைத் தூதர் W. M (Mr. Christopher W. Hodges, Consul General, U.S. Consulate General in Chennai) அவர்கள் மரியாதை நிமித்தமாக ரிப்பன் கட்டட அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார்.

விழுப்புரம் மாவட்டம் - வல்லம் ஒன்றியம்

# நாட்டார் மங்கலத்தில் ‘மக்களுடன் முதல்வர்’ திட்டம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஜூலை 20-

தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும் எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல்படுத்தப் பட்டுள்ள மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் ஊரகப் பகுதிகளில் கடந்த 11ஆம் தேதி தர்மபுரியில் முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளார் .

இதை அடுத்து விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் நாட்டார் மங்கலம் ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்டம் தொடங்கப் பட்டது.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி தலைமை தாங்கினார்.

ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் தரணி வேந்தன், வல்லம் ஒன்றிய பெருந் தலைவர் அமுதா ரவிக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சமூக பாதுகாப்பு திட்டத்தின் துணை ஆட்சியர் முகுந்தன் அனை வரையும் வரவேற்றார்.

கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி ஸ்ருதன் ஜெய் நாராயணன் திட்ட விளக உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மக்களுடன் முதல்வர் திட்டத்தினை தொடங்கி வைத்து பொதுமக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களை பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்காக அவர் அறிவுறுத்தினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்றாண்டு காலத்தில் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பெண்கள் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் .

அந்த வகையில் ஊரகப் பகுதிகளில் உள்ள ஏழை எளிய மக்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் ஒரு தனி துறையை உருவாக்கி மக்கள் மீது அக்கறையுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்களுடன் முதல்வர்திட்டத்தை தொடங்கி உள்ளார்.

இத் திட்டத்தின் கீழ் பெரப்படுகின்ற மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு பொது மக்களின் கோரிக்கை மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணப்படும் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் உறுதி பட தெரிவித்தார்.

நிகழ்ச்சியில்மயிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவகுமார், செஞ்சி வட்டாட்சியர் ஏழுமலை, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உதய குமார், இளங்கோ, ஒன்றிய செயலாளர்கள் துரை ,இளம்வழுதி, மாவட்ட கவுன்சிலர் அன்பு செழியன், மாவட்ட அமைப்பு சாரா தொழிலாளர் அணி அமைப்பாளர் தமிழரசன், மாவட்ட சுற்றுச்சூழல் துணை அமைப்பாளர் கார்வண்ணன், ஊராட்சி மன்ற தலைவர் மாரியம்மாள் மண்ணாங்கட்டி.உள்ளிட்ட உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் வளர்மதி நன்றி கூறினார்.

# திருக்கோவிலூரில் ஒன்றியக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

## வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கள்ளக்குறிச்சி, ஜூலை 20-

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம் ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருக்கோவி லூர் வடக்கு, தெற்கு, மேற்கு ஒன்றிய கழக செயல்வீரர்கள் கூட்டம் சந்தைப் பேட்டை பகுதியில் அமைந்துள்ள எம்.ஜே.திருமண மண்டபத்தில் ஒன்றிய கழக அவைத் தலைவர்கள் என். பொன்ரங்கம், வி.தமிழரசன்,ஏ.கண்ணன் ஆகியோர் தலைமையில், பார்வையாளர் செல்வராஜ்,ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.ராஜேந்திரன், எஸ்.அய்யனார்,

வி.கிருஷ்ண மூர்த்தி, ஒன்றிய குழு பெருந்தலைவர்கள் திருக்கோவி லூர் அஞ்சலாட்சி அரசகுமார், உளுந்தூர்பேட்டை ராஜவேல், உளுந்தூர் பேட்டை நகர மன்ற துணைத் தலைவர் வைத்தியநாதன், மாவட்ட கவுன்சிலர் கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த செயல் வீரர்கள் கூட்டத்திற்கு கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் க.வசந்தம் கார்த்திகேயன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தல் வெற்றிக்காக பாடுபட்ட கழக உடன்பிறப்புகளுக்கு நன்றி தெரிவித்து இனிவரும் காலங்களில் கழக நிர்வாகிகள் எவ்வாறு கழக ஆக்க பணிகளை துரிதப்படுத்தி மேற்கொள்ள வேண்டும் எனவும் விளக்கிக் கூறியும் சிறப்புரை யாற்றினர்.

இக்கூட்டத்தில் திருக்கோவிலூர் வடக்கு, தெற்கு, மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள்,ஒன்றிய குழு பெருந்தலைவர், துணைத் தலைவர், கிளைக் கழக செயலாளர், மாவட்ட ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் உள்பட அனைவரும் கலந்து கொண்டனர்.

சென்னை சர்வதேச விமான முனையத்தில்

# பயணிகள் காத்திருப்பை தடுக்க புதிய திட்டம்!

## ஆகஸ்ட் முதல் அமல்!

மீனம்பாக்கம், ஜூலை 20-

சென்னை விமான நிலையத்தின் சர்வதேச முனையத்தில் குடியுரிமை சோதனைக்கு பயணிகள் நீண்ட நேரம் காத்திருப்பதை தடுக்க, அடுத்த (ஆகஸ்ட்) மாதம் முதல் இமிக்ரேஷன் டிரஸ்டட் டிராவலர் புரோகிராம் எனும் புதிய திட்டம் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்படுகிறது. சென்னை விமான நிலையத்தின் சர்வதேச முனையத்தில் வெளிநாடுகளுக்கு செல்லும் பயணிகள், இந்தியாவுக்கு வரும் பயணிகள் அனைவருக்கும் குடியுரிமை சோதனை பிரிவு பெரிய பிரச்சனையாக இருக்கிறது. அங்கு நீண்ட வரிசையில் பல மணி நேரம் பயணிகள் காத்திருப்பதோடு, அதிகாரிகள் கேட்கும் கேள்விகளுக்கு முறையாக பதிலளித்து, சோதனை முடிந்து, பாஸ்போர்ட்டில் குடியுரிமை அலுவலக முத்திரை குத்தி, நமது பாஸ்போர்ட்டை அதிகாரிகள் தரும் வரையில் என்ன ஆகுமோ, என்ன நடக்குமோ என்ற பதற்றத்தில் பயணிகள் நிற்கவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது.

அதிலும் சென்னையில் இருந்து நள்ளிரவு நேரங்களில் அதிகளவு வெளிநாட்டு விமானங்கள் புறப்பட்டு செல்வதாலும், அதேபோல் வெளிநாடுகளில் இருந்து அதிகளவு விமானங்கள் ஒரே நேரத்தில் சென்னை வருவதாலும், இங்குள்ள குடியுரிமை கவுன்டரில் ஏராளமான பயணிகள் மணிக்கணக்கில் நீண்ட வரிசையில் காத்திருக்க நேரிடுகிறது. அதே நேரம் குடியுரிமை சோதனை மிக முக்கியமானது என்பதாலும், இது நமது நாட்டின் பாதுகாப்பு சம்பந்தப்பட்டது என்பதாலும் யாருக்கும் விதிவிலக்கு அளிக்கப்பட மாட்டாது. இப்பிரிவு, ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் நேரடி கண்காணிப்பில் இயங்கி வருகிறது. இந்நிலையில், இப்பிரச்னையில் இருந்து பயணிகளுக்கு விதிவிலக்கு அளிக்கும் வகையில், தற்போது ஒன்றிய உள்துறை அமைச்சகம் ‘பாஸ்ட் டிராக் இமிக்ரேஷன் டிரஸ்டட் டிராவலர் புரோகிராம்’ எனும் புதிய திட்டத்தை உருவாக்கியுள்ளது.

இப்புதிய திட்டத்தின் மூலம் இந்திய பாஸ்போர்ட் வைத்துள்ள பயணிகள் மற்றும் பூர்வீக இந்தியர்களாக இருந்து, தற்போது வெளிநாடுகளில் நீண்ட காலமாக வசிப்பவர்கள் மட்டுமே பலனடைய முடியும். இத்திட்டத்தில் பலனடைய விரும்புபவர்கள், தங்களின் பயணத்துக்கு முன்பே அதற்காக தனியே உருவாக்கப்பட்ட இணையதள முகவரியில் பதிவு செய்து இணைய வேண்டும். அதோடு பெரியவர்கள் 2 ஆயிரம், குழந்தைகள் 1000, வெளிநாடுவாழ் இந்தியர்கள் 100 அமெரிக்க டாலரை கட்டணமாக செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும். இக்கட்டணம் ஒவ்வொரு முறை பயணம் செய்யும் போது செலுத்த வேண்டிய அவசியமில்லை. ஒரு முறை கட்டணம் செலுத்தினால், அவர்களின் பாஸ்போர்ட் காலாவதியாகும் தேதிவரை செல்லுபடியாகும். இதில், தங்களின் முக அடையாளங்கள், கைவிரல் ரேகைகள், கண் கருவிழிகள் போன்றவற்றையும் இணையதள முகவரி மூலம் பதிவு செய்ய வேண்டும். பின்னர் பயணம் செய்யும் தேதியில் சென்னை வரும்போது, குடியுரிமை சோதனையில் அவர்கள் வரிசையில் நீண்ட நேரம் காத்திருக்க தேவையில்லை. அவர்களுக்கு தனியே கவுன்டர்கள் இருக்கும்.

அங்கு பொருத்தப்பட்ட நவீன கருவிகள் மூலம் தங்களின் அங்க அடையாளங்களை பதிவு செய்து, அதிகாரிகளின் நீண்டநேர கேள்விகள் இன்றி, குடியுரிமை முத்திரை பதிக்கப்பட்டு, குறைந்த நேரத்தில் தங்களின் சோதனை முடிந்து, தங்களின் உடைமைகளுடன் வெளியே செல்வதற்காக, கன்வெயர் பெல்ட் பகுதிக்கு சென்றுவிடலாம். இந்த அதிநவீன முறை கடந்த மாதம் டெல்லி சர்வதேச விமான நிலையத்தில் துவங்கப்பட்டுள்ளது. இதையடுத்து, சென்னை சர்வதேச விமான முனையத்தில் அடுத்த (ஆகஸ்ட்) மாதம் செயல்பாட்டுக்கு கொண்டு வருவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக சர்வதேச வருகை குடியுரிமை பகுதியில் 2, புறப்பாடு பகுதியில் 2 சிறப்பு கவுன்டர்கள் தனியாக அமைக்கப்படுகின்றன என்று சென்னை விமான நிலைய அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர். எனினும், இத்திட்டத்தில் இந்தியர்கள், பூர்வீக இந்திய குடிமக்கள் மட்டுமே பலனடைய முடியும். வெளிநாட்டு பயணிகள் அனைவரும் வழக்கமான குடியுரிமை சோதனைக்கு உட்படுத்திதான் ஆக வேண்டும் என்றும் விமானநிலைய அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கின்றனர்.